[25th January 1972

(இ) ஆமெனில், இதுவரை எத்தனை பேர் அம்மாதிரி வேலையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 172 பேர்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, அண்மையில் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் நிலங்கள் கொடுத்தவர்களுடைய குடும்பங்களிலிருந்து எடுக்கப்படாமல், வெகுதூரத்திலிருந்து வந்தவர்கள் எடுக்கப்பட்டிருப்பதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஏதாவது பிரச்சாரம் நடைபெறுகிறதா என்று எனக்குத் தெரியாது. என்னிடமுள்ள தகவலின்படி 933 பேர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அண்மையில் மஸ்தூர் என்ற முறையில் 543 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 172 பேர்கள் நிலத்தை விட்டுக் கொடுத்தவர்கள். வேலை வாய்ப்புகள் வரும்போது நிலத்தை இழந்தவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, முதலிடம் ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு டிரைப், இரண்டாவது இடம் லாண்ட்லெஸ் அக்ரிகல்சுரல் லேபரர் என்று போட்டு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

Ground water Exploration

*32. *Q*.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Union Government have undertaken the ground water exploration in Thanjavur District : and

(*b*) if so, the details thereof.

நில நீர் ஆய்வுப் பணி

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய அரசு நிலநீர் ஆய்வுப் பணி மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சோதனைக்குழாய் கிணறு அமைப்பு என்று அழைக்கப்பட்ட இந்திய அரசின் விவசாயத்துறையிலுள்ள மத்திய நிலநீர் வாரியம் துளையிடும் வேலைகளை இரு கட்டங்களாக மேற்கொண்டு, முதல் கட்டம் 1957-58-லும் இரண்டாவது கட்டம் 1969-71-லும்மாக தஞ்சை மாவட்டத்தில் நடத்தி இருக்கிறது. முதல் கட்டத்தில்

25th January 1972]

துளையிடப்பட்ட 7 துளை துவாரங்களில் (Bore holes) மூன்று துளை துவாரங்கள் உற்பத்தி கிணறுகளாக (Production wells) மாற்றப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் துளைக்கப்பட்ட 33 சோதனை துவாரங்களில் 19 துளைகள் உற்பத்தி குழாய்க் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன. மீதி துவாரங்கள் கைவிடப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : எந்தெந்த இடங்களில் தோண்டப்பட்டவை பயன் உள்ளவையாக இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டத்தில் தோண்டப்பட்ட கிணறுகளில், மருங்குளம் 803 அடி, திருவோணம் 999 அடி, புதுப்பட்டி 779 அடி. மற்ற விவரங்கள் இல்லை.

திரு. வி. வெங்கா : வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கிற செங்கல்பட்டு மாவட்டத்தில் நில நீர் ஆய்வு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மத்திய அரசாங்கத்தால் செய்யப்படுகிறது. தமிழ் நாடு அரசாங்கத்தால் நடத்தப்படுகிற விரிவான திட்டம் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன்-ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தஞ்சாவூர் ஜில்லாவிலே ஏராளமான குழாய்க் கிணறுகள் போடுவதற்காக பெரிய திட்டம் ஏற்பாடாகியிருக்கிறது என்று பத்திரிக்கையிலே படித்தேன். இது விஷயமாக ஏதாவது தகவல் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு இது சம்பந்தமான கேள்வியைப் போட்டால், அவர்கள் விவரமாகப் பதில் சொல்வார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தஞ்சை மாவட்டத்திற்கு காவிரி நீர் வருவது தடைப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகையினால் அதிகமான அளவில் நிலத்தின் அடியிலிருந்து தண்ணீர் எடுக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தஞ்சை மாவட்டத்தில் நிலத்துக்கடியிலுள்ள நீரைப்பற்றி இப்போது ஸ்டேட் டைரக்டர் ஆஃப் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் வேலை செய்து வருகிறது. புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்ட மக்களின் அச்சத்தைப் போக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

Irrigation Schemes

* 33 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) the number of irrigation schemes sanctioned by the Government as on date, in the Ramanathapuram District;

(b) the number of irrigation schemes under the examination of the Government, as on date: and

(c) the names of such schemes and the areas benefited by them?